
476

# சிலுவையில் மாண்டவர்

நெ. து. சுந்தரவடிவேலு

SCANNED



வ... வரிசை

3

N59
77828

# காணிக்கை

எங்கள் அருஞ் செல்வனுகப் பிறந்து, தன் பள்ளியின் தொண்டனுக இருந்து, தமிழகக் கல்வித் தொண்டர்களின் தோழனுக வளர்ந்து, பிறிதினேய் தன்னேய்போல் கொண்டு உருகி, பள்ளியில் பலருக்கும் பலவும் கிடைக்கத் தூண்டி, திட்டங்கள் சில தந்து, எனக்கு, நேர்மையைப் பளிச் சென்று இனிமையோடு காட்டும் குருவாக வாழ்ந்து, 'எதற்கும் கவலேப் படாதீர்கள் அப்பா' என்று தேற்றி, விரைந்து மறைந்துவிட்ட

குமரகுரு

கா. சு. திருவள்ளுவனுக்கு.

# சிலுவையில் மாண்டவர்

நெ. து. சுந்தரவடிவேலு

முருகன் & கம்பெனி
32, வெங்கடேச கிராமணி தெரு
சிந்தாதிரிப்பேட்டை :: சென்னை-2

முதற் பதிப்பு — நவம்பர் 14, 1959

# ஏன் ?

"ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் படிக்க எத்தனை நூல்கள்! எவ்வளவு அருமையானவை அப்பா! தமிழ் தெரிந்த குழந்தைகளுக்கும் நூல்கள் வேண்டும். அதே தரத்தில் வேண்டும். இது மற்றவர்களுக்குச் சொல்லி நடப்பதல்ல. நீங்களே எழுதிக் காட்டி விடுங்கள். முதலில் சாக்ரடீசு, இயேசு, காந்தி ஆகியவர்கள் வாழ்க்கையை எழுதுங்கள்" என்று கட்டளையிட்டான் என் மகன், கா. சு. திருவள்ளுவன், இது ஓராண்டிற்கு முன். விளைவு உங்கள் முன்.

இப்போது வெளியாகும் ஐந்து நூல்களையும் அவனுக்குப் படித்துக்காட்டினேன். அவன் ஆங்காங்குத் திருத்தினான்; செம்மைப் படுத்தினான். உள்ள படங்கள் பல அவன் யோசனையில் பிறந்தவை.


இதில் வரும் கருத்துக்கள் அரசினர் கருத்துக்கள் அல்ல. இவற்றிற்கு நானே பொறுப்பு.

இந் நூல்களை நிறையப் பயன் படுத்துங்கள் படிப்பின் போக்கிலே புதுத் திருப்பத்தைக் காணுங்கள். தமிழருக்குப் பெருந்தொண்டு செய்யுங்கள்.

நெ. து. சுந்தரவடிவேலு

14—11—'59

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5



## சிலுவையில் மாண்டவர்

ஊரை உருவாக்க உயிரைக் கொடுத்
தவர்! அவர் கதை கேட்டேன்.

சரி! இன்னுமென்ன ?

ஆணியால் அடிக்கப்பட்டவர்...

ஓ! உலகை உருவாக்க உயிர் கொடுத்தவர் கதையும் வேண்டுமா ?

ஆம். சொல்லுங்கள் அண்ணு!

ஏசு என்பது அவர் பெயராம்.

எங்கே பிறந்தார் அவர் அண்ணு ?

பெத்தலகேம் அவர் பிறப்பிடமாம்.

தாய் யாரோ சீமாட்டி ?

அன்னை மரியாள் அவள் பெயராம்.

தந்தைக்கு வேலை என்னவோ ?

தச்சு வேலைதான் தம்பி.





ஏழை வீட்டு ஏசுவா ?

வீட்டிலும் இல்லை பிறப்பு !

பின் எங்கே பிறந்தார் ?

போன இடத்தில், தொழுவத்தில்.

அப்படியா செய்தி ! படிப்பு ?


உரிய வயதில் படிப்பு. குருமார் போதனை.

ஆழ்ந்து கற்றுரா ?

ஆம், கவனமாகக் கற்றுர் ; ஊன்றிக் கற்றுர்.

இன்னும் என்ன அண்ணு ?

தாமாகவே சிந்தித்தார். துணிச்சலாகப் பேசினுர்.



சரி ! உயிர் கொடுத்த காரணம் ?

ஊரார் பகை.

ஏன் ?

கண்மூடித்தனம்.

விளக்கிச் சொல்லுங்கள் அண்ணு.

சரி, சொல்லுகிறேன். பாலஸ்தீனம் என்பது அவர் நாடு. எருசலேம் என்பது மிகப் புனித மான ஊர்.


நம் மதுரை போல !

அப்படித்தான். அங்கிருந்த கோயில் பெரிய கோயில்.

சரி.

ஆண்டுக்கு ஒரு முறை பெரிய திரு விழா.

நம் கோயிலில் உள்ளதைப் போல்.



திருவிழாவின் போது ஆடு, கோழி, பலி.

ஐயோ பாவம்!

அதற்காகப் பெரிய சந்தை. அதோடு காணிக்கை.

அப்புறம்.

பணம் மாற்றக் காசுக்கடை.

பெரிய வாணிகம்தான்.

ஆம். இவ்வளவும் கோயிலுக்குள் வந்து விட்டன.

அப்புறம் கும்பிடுவது எப்படி ?

அதுதான் ஏசு கேட்டதும்.



சரிதானே, கோயில் சந்தையானல் அமைதி ஏது ?

அமைதி இல்லாமல் ஆழ்ந்த சிந்தனை ஏது ?

ஆழ்ந்து வழிபடாமல் ஆண்டவனை உணர்வது எப்படி ?

ஏசு சொன்னதும் அதுவே. சொன்னதோடு நின்ருரா ?

பின் என்ன செய்தார் ?

கோயிலுக்குள் இருந்த ஆடு கோழிகளை அப்புறம் விரட்டி விட்டார்.



யாரும் குறுக்கே பேசவில்லையா ?

பேசினுர்கள்.

ஏசு என்ன சொன்னுர் ?

" கோயில் கள்ளர் குகையாவதா ?'' என்று ஆத்திரப்பட்டார்.

இறைவன் இருப்பிடத்தில் இரைச்சல் இருக்கலாமா ?

கூடாது. ஆடு கோழி போயின. குருக்களின் உயர்வும் பறந்தது. வருவாயும் வறண்டது.

பெருமையும், பணமும் போனதும் குருமார்களுக்குக் கோபம் வந்ததோ ?

வந்தது. நன்ருக வந்தது.

என்ன சொன்னுர்கள் ?

"எங்களுக்குத் தெரியாதது இவருக்குத் தெரியுமா ?" என்று உறுமினுர்கள்.

சரி. ஆண்டவன் இவர்களிடம்தான் அடக்கமா ? ஏசு என்ன செய்தார் ?

தொடர்ந்து நல்லது செய்தார்?

யாருக்குச் செய்தார் ?

தேவைப்பட்டவர்களுக் கெல்லாம்.

அப்படியா ? இதிலாவது கோபம் தணிந்ததா ?

தந்நலக்காரர்களுக்குப் பொது நலம் தெரியுமா ?

கிடக்கட்டும். உயிரைப் போக்க அவ்வளவு கோபம் ஏன் ?

தாழ்த்தப்பட்ட மக்களோடு உறவு கொண்டார்.

அட சனியனே ! அங்கும் இந்நோய் உண்டா ?

ஆம். மக்களில் சிலர் உயர்ந்தவர்களாம். சிலர் தாழ்ந்தவர்களாம்.

ஏசு அப்படி நினைத்தாரா ?

இல்லை. 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்பவர்களோடு உண்டார்.

அப்புறம் ?

அவர்களைத் தொட்டார். அவர்களில் ஒருவரை அடியவராக ஏற்றுக்கொண்டார்.

கோபம் கொழுந்து விட்டிருக்கும் !

ஆம். குமுறல் அதிகமாயிற்று.



ஏசு ஏதாவது சமாதானம் சொன்னரா ?

"உன்னைப்போல் பிறரையும் நேசி." என்றார்.

நல்ல வழிதானே, கடினமான வழி யானாலும்! இன்னும் என்ன சொன்னர்?

" பொய் சொல்லாதே. "

நல்லது.

" களவு செய்யாதே. "

சரி.

" கொலை செய்யாதே. "

தப்பென்ன ?

" ஒழுக்கமாயிரு. "

நல்ல நெறிதானே !



" தீமைக்குப் பதில் நன்மை செய். "
என்ன சாந்தி வழி !
இதுவே காந்தி வழியும்.
இவற்றையுமா மறுத்தார்கள் ?
இல்லை. மறுக்க முடியவில்லை.
பின் என்ன செய்தார்கள் ?
பொருமைப்பட்டார்கள். ஆத்திரப்பட்டார்கள். திட்டம் போட்டார்கள்.
என்ன திட்டம் ?
சதித் திட்டம்.
என்ன சதி ?
ஏசுவை வம்பிலே மாட்டிவிடும் சதி.
பலித்ததா ? என்ன வம்பிலே மாட்டினார்கள் ?



தெய்வ நிந்தனைக் குற்றம் சாட்டினார்கள்.

எப்படி தெய்வ நிந்தனை ?

" நீ ஆண்டவனின் மகனா? " என்றார்கள்.

"ஆம்." என்றார் ஏசு.

எல்லோரையும் படைத்தவர் தானே கடவுள்.

அப்படியானால் அவர் சொன்னதில் தவறு என்ன ?

தவறு ஒன்றுமில்லை.

" இறைவனை இழிவு படுத்துகிறார். " என்றார்கள் குருக்கள்.

ஏதோ ஒரு சாக்கு. முடிவு என்ன ?

கொலைத் தண்டனை.

கொடுத்துவிட்டார்களா குருக்கள் ?



இல்லை. அதை மன்னன் பிரதிநிதிதான் கட்டளை இடலாம்.

அக்கட்டளையை எப்படிப் பெற்றார்கள்? அரசத் துரோகம் என்ற குற்றமும் சாட்டினார் கள்.

சாட்சி உண்டா ?

சான்று வேறா ? ஏதோ சொன்னது சரிதான்.

நல்ல நியாயமாக இருக்கிறதே !

தயங்கினான் மன்னன் பிரதிநிதி.

பின் எப்படி மயங்கினான் ?

"ஏசுவை விட்டு விட்டால் அமைதி குலையும். ஆட்சி கவிழும்." என்றார்கள். அந்த ஆபத் திற்கு யார் தலை கொடுப்பார்கள் ?

மிரட்டலுக்கு அஞ்சி சரியென்ருஞ ?

ஆம். சிலுவையில் அறையக் கட்டளை யிட்டான்.

சிலுவை என்ருல் என்ன ?

ஆள் உயரம் நீண்ட மரச் சட்டம். குறுக்கே யும் ஒரு சட்டம் ஆணியால் பொருத்தப் படும்.

சிலுவையில் அறைவானேன் ?

அதுதான் அவர்கள் கொல்லும் முறை. மனிதனைச் சிலுவையில் நிறுத்தி வைத்து ஆணி அடிப்பார்கள்.

அப்படியே செய்துவிட்டார்களா ?

ஆம். ஆணி அடித்துக் கொன்று விட் டார்கள்.



அப்பப்ப! என்ன கொடுமை! என்ன அநீதி !

அறவழி சொன்னுல் ஆதிக்கக்காரருக்கு ஆத்திரம்.

அவர் காட்டிய அறவொளி அணைந்ததா ?

எப்படி அணையும்! உடலைத்தான் கொல்லலாம். உண்மையைக் கொல்ல முடியுமா ?


அப்படியா! அவர் நல்லுரைகள் பரவினவா ?

பரவின. உலகெங்கும் பரவின.

பொறுமைக் கடல் ஏசு வாழ்க !

அன்புமொழி வளர்க !





## அடுத்தது?

பால் நல்லது. புளித்துப்போனால்?
மதப் பற்று நல்லது: அது வெறியானால்?

இதை உணர்த்த

## குண்டுக்கு இரையானவர்

25 காசுகள்